செ.வெ.எண்: 75 நாள்: 25.10.2017

# செய்தி

25.10.2017 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களால் முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்புக் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர்கள்/சார்ந்தோர்களின் கோரிக்கை தொடர்பாக 14 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட இம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்திட மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆணையிட்டார். மேலும் கடந்த 12.05.2017 அன்று நடைபெற்ற முன்னாள் படைவீரர் சிறப்புக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின் போது பெறப்பட்ட 40 மனுக்களின் நடவடிக்கை விவரத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்தார். கூட்டத்தில் 05 முன்னாள் படைவீரர்கள்/அவர்களது விதவையர்களுக்கு ரூ.43,790/-க்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. கூட்டத்தில் வட்டாட்சியர்கள், வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை முன்னாள் படைவீரர்நல உதவி இயக்குநர் ந.இராஜேந்திரன் அவர்கள் மேற்கொண்டார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி.

(கையொப்பம்) 25.10.2017
உதவி இயக்குநர்
முன்னாள் படைவீரர் நலம்
திருநெல்வேலி - 627 009